# கே.டி.வி.ஆர். விஜயதீபா குழுமம் சார்பில் மருத்துவ ஆராய்ச்சி மையம்

கோவை, ஜூலை 29: கே.டி.வி.ஆர். விஜய தீபா குழுமம் சார்பில் மருத்துவ ஆராய்ச்சி மையம் ஆக.14-ம் தேதி துவக்கப்படவுள்ளது.

இக் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் வி.ஜனார்த்தனம், கே.டி.வி.ஆர். மருத்துவமனையின் இயக்குநர் எஸ்.விஜய வெங்கடராமன் ஆகியோர் கோவையில் செய்தியாளர்களுக்கு வியாழக்கிழமை அளித்த பேட்டி:

தமிழகம் மற்றும் புதுவையை மையமாக வைத்து கிளினிமைன்ட்ஸ் என்னும் மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஆக.14-ம் தேதி துவக்கப்படுகிறது. தமிழகம் மற்றும் புதுவையில் வகுப்பறை மற்றும் ஆன்லைன் பயிற்சிகள் அறிமுகப் படுத்தப்படுகிறது.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த

## ஆக. 14-ல் துவக்கம்

தொழில்நுட்ப வல்லுனர்களின் பங்களிப்பு நாட்டின் வளர்ச்சிக்கு உதவியாக அமையும். உலகம் முழுவதும் உயிரிதொழில்நுட்பத்துறை மிகப்பெரிய வளர்ச்சி அடைந்து வருகிறது. இருப்பினும் தமிழகத்தில் இத்துறைக்கான வழிகாட்டிகள் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது.

2014-ம் ஆண்டில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் தேவைப்படுவார்கள். ஆனால், இப்போதைக்கு இந்தியாவில் ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இதை பூர்த்தி செய்யும் வகையில் கே.டி.வி.ஆர். குழுமம் சார்பில் மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சி படிப்புகள் துவக்கப்பட்டுள்ளன.

மருத்துவம், பல் மருத்துவம், ஹோமியோபதி, பார்மஸி, உயிரிதொழில்நுட்பம், உயிரிவேதியியல், நுண் உயிரியல் மற்றும் அறிவியலை பாடமாக படித்தவர்கள் இப் படிப்பில் சேரலாம். மூன்று மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை பல்வேறு பிரிவுகளாக இப் படிப்புகள் கற்றுத்தரப்படுகின்றன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் மருத்துவ நிபுணர்கள் டெலிகான்பரன்ஸ் முறையில் பாடம் நடத்துவார்கள். செய்முறை பயிற்சி, துறை சார்ந்த நிறுவனங்களில் பயிற்சி வகுப்பு, வேலைவாய்ப்பு, ஆன்லைனில் பாடம் கற்கும் தொழில்நுட்பம் உள்ளிட்டவை இப் பயிற்சியின் சிறப்பு அம்சங்கள் என்றனர்.

தினமணி 30-07-2010